1992 பிப்ரவரி 10]

30-1-1992-ஆம் தேதி விடுபட்ட வினா எண் 20, உறுப்பினர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க இப்போது எடுத்துக் கொள்ளப்படுகிறது. வினா எண். 20, திரு. ப. கலியபெருமாள். மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர்

20—.

மீனவர்களுக்குச் சலுகைகள்.

*வினா எண் 5002—திரு. ப. கலியபெருமாள் :

மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கடலில் மீன்பிடிக்கும் மீனவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள சலுகைகளை உள்நாட்டு மீனவர்களுக்கும் வழங்கி வீடுகட்டித் தந்தும், தொழில் நடத்தவும் கடன் உதவி செய்திடவும் அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) உள்நாட்டு மீனவர்களுக்கும் சில சலுகைகள் இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசால் அளிக்கப்படுகின்றன.

(ஆ) உள் நாட்டு மீனவர்களுக்குக் கீழ்க்கண்ட சலுகைகள் வழங்கப்படுகின்றன,

1. உள்நாட்டு கூட்டுறவு சங்க மீனவர்களுக்கு காப்பீட்டு நிவாரணம் வழங்கப்படுகிறது.

2. மீன்பிடித் தொழில் நடத்திட வள்ளம், வலை போன்ற உபகரணங்கள் வாங்கிடவும் மீன் விற்பனையின் துரித போக்குவரத்திற்கு ஊர்தி வாங்கிடவும் மீனவர் கூட்டுறவுச் சங்கம் மூலமாக அரசு கடனுதவி அளிக்கப்படுகின்றது.

3. மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நீண்ட கால அடிப்படையில் மீன்பாசிக் குத்தகை வழங்கப்படுகிறது.

4. மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்ய மானியம் வழங்கப்படுகிறது.

5. உள்நாட்டில் மீன்குஞ்சு உற்பத்தியைப் பெருக்க மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை மூலமாக மானியம் மற்றும் வங்கி கடன் வசதி செய்து கொடுக்கப்படுகிறது.

திரு. ப. கலியபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்நாட்டு மீனவர்களுக்குப் பல்வேறு சலுகைகளை அளித்திருப்பதாகச் சொல்கிறார்கள். கடலில் வாழும் மீனவர்களுக்கு பல்வேறு சலுகைகள் உள்ளன. வீடு கட்டித் தந்தும், கடன் உதவிகள் தந்தும், மற்றைய அரசின் உதவிகளும் தருகிறார்கள். அதைப்போல் உள்நாட்டு மீனவர்களுக்கும் அளிக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக கடல் மீனவர்கள் இயற்கையின் சீற்றத்தால் பெரிதும் பாதிக்கப்படுபவர்கள் என்பதற்காக அவர்களுக்கு இலவச வீடு மற்றும் இதர சலுகைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. மாறாக உள்நாட்டு மீனவர்களுக்கு இயற்கை சீற்றத்தால் ஏற்படும் இழப்புகள் அவ்வளவாக இல்லை. இதனைக் கருத்தில் கொண்டு அவர்களுக்குரிய சலுகைகள் ரெஸ்ட்ரிக்ட் செய்யப்பட்டு இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. கலியபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலில் வாழும் மீனவர்கள் வருஷம் பூராவும் தொழில் நடத்துபவர்கள். உள்நாட்டு மீனவர்களுக்கு 6 மாதம்தான் உழைப்பு இருக்கிறது. அதுவும் அவர்கள் சொந்த நிலம் இல்லாமல் குடி இருப்பதற்குக் கூட நிலம் இல்லாமல், சாதாரண அரசு புறம்போக்கு நிலங்களில் குடிசை கட்டிக்கொண்டு ஒரு குடிசையில் மூன்று நான்கு குடும்பங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வீடு கட்டித் தரவும், குடும்பத் தலைவரை இழந்து விட்டால் அக்குடும்பங்கள் வசதியற்ற சூழ்நிலையில் வாழ்கிற நிலையைப் போக்குவதற்கும் அந்தக் குடும்பங்களுக்கு ஏதாவது அரசு உதவிகளைச் செய்து தரவும், மற்ற காலங்களில் வலைகள் போன்றவற்றை வாங்குவதற்கும் குடும்பம் நடத்துவதற்கும் அவர்களுக்கு வசதி இல்லாத காரணத்தால் அவர்களுக்குக் கடன் கொடுக்கவும் இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்நாட்டு மீனவர்கள், மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களாக இருப்பதன் மூலம் தொழிலில் ஈடுபட்டிருக்கும்போதோ அல்லது விபத்தில் இறந்தாலோ, முழு ஊனமுற்றாலோ காப்பீட்டு நிவாரணம் ரூபாய் 15,000 வழங்கப்படுகிறது. இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி

1992 பிப்ரவரி 10]

அவர்களின் ஆட்சியில் இந்தத் தொகையைப் பொறுத்தவரையில் இறப்புக்கு ரூபாய் 21,000 என்றும் பகுதி ஊனமுற்றால் 10,500 எனவும் ஆணையிட்டு, மத்திய அரசிடம் பங்குத் தொகை தர வேண்டும் என கூறப்பட்டுள்ளது. இத்தகைய சலுகைகளை உள்நாட்டு மீனவர்களின் மேம்பாட்டுக்காக இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு அவர்களுக்கு வழங்கி வருகிறது. எனினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இலவச வீடுகட்டிக் கொடுக்கவேண்டும் என்ற கருத்தினையும் சொன்னார்கள். அதனை அரசு பரிசீலிக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : செல்வி கோ. மல்லிகா.

செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புவனகிரி தொகுதியில் புதுக்குப்பம், சாமியார் பேட்டை ஆகிய இடங்களில் மீனவ மகளிருக்காக நமது இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களை ஈன்றெடுத்த அன்னை சந்தியா மகளிர் கூட்டுறவுச் சங்கம் அமைக்கவேண்டுமென்ற வகையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த முயற்சிகள் வெற்றி அடையும் முன் அங்குள்ள மீனவ மகளிர் மேம்பாடு அடைய அரசு அளித்து வருகிற மானியங்களை, முன்னுரிமை அளித்து அளிக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இக்கேள்வி உள்நாட்டு மீனவர்களைக் குறித்ததாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடலோர மீனவர்கள் சங்கம் பற்றி குறிப்பிட்டுள்ளார்கள். இது குறித்த தகவலினை அளிப்பார்கள் என்றால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. கே. சின்னசாமி.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மீனவர்கள் குறிப்பாக கிராமங்களிலே மீன் பிடிக்கின்றவர்கள் பொதுப்பணித்துறைக்குச் சொந்தமான இடங்களிலேதான் குடியிருந்து வருகிறார்கள். அவர்கள் பல ஆண்டுகளுக்கு முன் வீடு கட்டியும் பொதுப்பணித்துறை அமைச்சர் மூலமாக அந்த இடத்தைப் பெற்றுத்தர முடியாத சூழ்நிலை இருந்து வருகிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அப்படிப்பட்ட, குறிப்பாக என்னுடைய தொகுதியில் பவானிசாகர் போன்ற இடங்களிலேகூட அப்படித்தான் இருக்கிறது. ஆகவே, பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களோடு அனிகி எந்தெந்த இடங்களில் இப்படி மீனவர்கள் பொதுப்பணித்

துறைக்குச் சொந்தமான இடங்களில் வீடு கட்டியிருக்கிறார்களோ அவர்களுக்குப் பட்டாக்கள் கொடுப்பதற்கான நடவடிக்கையை எடுக்க முன்வருவார்களா? அதோடு மட்டுமல்லாமல் அவர்கள் பிடிக்கின்ற மீன்களுக்கு விலை குறிப்பிட்டு, ஒரு விலை அதாவது ஒரு குறிப்பிட்ட பங்கு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி தொடர்புடையதாக இருக்க வேண்டும். முதல் கேள்வி தொடர்புடையது. அதன் பிறகு இரண்டாவது கேள்வி தொடர்பு இல்லாதது. மாண்புமிகு அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தொடர்பில்லாத கேள்வி. அதாவது "irrelevant question" ஆக இருப்பதால், அது குறித்து தனியாகக் கேள்வி போட்டால் அதற்குரிய விடை தரப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சோ. இராசாராமன்.

திரு. சோ. இராசாராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயற்கையின் சீற்றத்தால் பாதிக்கப்பட்டு அவர்கள் பல சலுகைகள் அடைவதுபோல, உள்நாட்டிலே இருக்கின்ற மீனவர்கள் 6 மாதத்திற்கு அவர்கள் மீன் தொழில் செய்ய முடிகிறது. மீதி நாட்களிலே அவர்கள் சாப்பாட்டிற்குக்கூட கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதோடு மட்டுமல்லாமல் சென்ற 5, 6 ஆண்டுகளாக இயற்கையின் கோளாறால் காவிரி போன்ற பல ஆறுகளிலே தண்ணீர் வரவில்லை. அவர்கள் இன்னும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் மனதிலே வைத்து அமைச்சர் அவர்களும் அரசும் உள்நாட்டு மீனவர்களுக்கு உடனடியாக குடியிருப்பதற்கு அவர்களுக்கு பட்டா வழங்க வேண்டும், வீடு கட்டிக் கொடுக்கவேண்டும், இதற்கு அரசு ஆவன செய்யுமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கரைமேல் பிறக்க வைத்தான், எங்களைக் கண்ணீரில் மிதக்கவிட்டான்" என்ற நிலை இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சியில் இருக்காது என்பதை நான் தெளிவாகக் கூறி, கடல் மீனவர்களுக்கு அவர்கள் தொழில் செய்யாத காலங்களில் குறிப்பாக 4 மாதங்கள் அவர்களுக்கு ஒவ்வொரு மாதமும் தலா 270 ரூபாய் அவர்கள் தொழில் செய்யாத காலங்களில் வழங்க அரசு உத்தேசித்து, அதற்கான நடவடிக்கை விரைவாக மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உடுக்குறியிட்ட வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.